DINAMANI - 16/04/2023

# பல்கலைக்கழக மாணவர் குறைதீர் குழுக்களில் உரிய பிரதிநிதித்துவம்: யுஜிசி அறிவுறுத்தல்

**புது தில்லி, ஏப். 15:** கல்லூரி, பல்கலைக் கழக மாணவர் குறைதீர் குழுக்களில் எஸ்சி, எஸ்டி, ஓபிசி பிரிவுகளைச் சேர்ந்தவர்களும், பெண்களும் தலைமைப் பொறுப்பிலோ அல்லது உறுப்பினர்களாகவோ நியமிக்கப்படுவதை பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) கட்டாயமாக்கியுள்ளது.

தேசிய கல்விக் கொள்கையில் குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில் முந்தைய 2019 வழிகாட்டுதலுக்கு மாற்றாக, 'மாணவர் குறைதீர் நடைமுறைகள் 2023' என்ற புதிய வழிகாட்டுதலை கடந்த 11-ஆம் தேதி அறிவிக்கையாக யுஜிசி வெளியிட்டது.

இந்தப் புதிய வழிகாட்டுதலில் உள்ள நடைமுறைகளைப் பின்பற்றி மாணவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குமாறு அனைத்து உயர்கல்வி நிறுவனங்களையும் யுஜிசி கேட்டுக்கொண்டுள்ளது.

புதிய வழிகாட்டுதலின்படி, மாணவர் குறைதீர் குழுவில் குறைந்தபட்சம் ஓர் உறுப்பினராக அல்லது தலைவராக ஒரு பெண் நியமிக்கப்பட வேண்டும். அது போல, எஸ்சி, எஸ்டி, ஓபிசி பிரிவைச் சேர்ந்தவர்களை குறைந்தபட்சம் ஓர் உறுப்பினராக அல்லது தலைவராக நியமிக்க வேண்டும்.

மேலும், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் மாணவர்களின் குறைகளைத் தீர்க்க குறைதீர் அதிகாரி ஒருவரை நியமிக்கும் நடைமுறையையும் புதிய வழிகாட்டுதல் மீண்டும் அறிமுகம் செய்துள்ளது. குறைதீர் அதிகாரியாக நியமிக்கப்படுபவர் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணி அனுபவம் கொண்ட ஓய்வு பெற்ற துணைவேந்தர் அல்லது பேராசிரியராக இருக்க வேண்டும். அல்லது ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியை நியமிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து யுஜிசி தலைவர் ஜகதீஷ் குமார் கூறுகையில், 'புதிய வழிகாட்டுதலின்படி, உயர் கல்வி நிறுவனங்களில் ஜாதி அடிப்படையிலான பாகுபாடு தொடர்பான புகார்களுக்கு தீர்வு காண கூடுதல் மன்றம் ஒன்று அமைக்கப்படும். இந்தப் புதிய வழிகாட்டுதலால், ஏற்கெனவே உள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளில் மாற்றம் இருக்காது. ஜாதி, மதம், மொழி, இனம், பாலினம் அல்லது உடல் குறைபாடுகள் அடிப்படையில் எந்தவொரு மாணவருக்கும் பாகுபாடு காட்டப்படாததை உறுதிப்படுத்த யுஜிசி அவ்வப்போது வெளியிடும் வழிகாட்டுதலிலும் பாதிப்பு இருக்காது' என்றார்.

சென்னை ஐஐடி உள்ளிட்ட சில கல்வி நிறுவனங்களில் ஜாதிய பாகுபாடு காட்டப்படுவதாகக் கூறி மாணவர்கள் சிலர் தற்கொலை செய்துகொண்ட நிலையில், இந்த அறிவுறுத்தலை யுஜிசி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.